சுருக்கம்

மானியம் – 2008–2009 – தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 2008–2009ஆம் ஆண்டு மானியத் தொகை மூன்றாவது மற்றும் நான்காவது தவணை விடுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி2) துறை

அரசாணை(டி) எண். 37

நாள் 27.01.2009.
தை மாதம்–14,
திருவள்ளுவர் ஆண்டு–2040.
படிக்க:

1. அரசாணை(டி) எண் 295, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(ஜி2) துறை, நாள் 12.8.08.
2. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரின்(பொ) கடிதம் எண்.ஏ2/ 1230/2008, நாள் 2.1.09.

----

ஆணை:

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு 2008–2009ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மானியத் தொகையாக ரூ. 81.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் இக்கல்வி நிலையத்தால் 2008–2009ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கருத்தரஙகுகளின் மூலம் பெற்ற கட்டணத் தொகை ரூ.5,78,018/–ல் 60% அதாவது ரூ.3,46,811/– கழிந்தது போக மீதி மானியத்தொகையான ரூ.77,80,000/–ல் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதலாம் மற்றும் இரண்டாம் தவணை தொகை மானியமாக ரூ.38,90,000/– வழஙகப்பட்டது எனவும், மூன்றாவது மற்றும் நான்காவது தவணைத் தொகையாக மீதமுள்ள ரூ.38,90,000/–ஐ விடுவிக்குமாறு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரின்(பொ) கோரிக்கையினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, 2008–2009ஆம் ஆண்டிற்கான மூன்றாவது மற்றும் நான்காவது தவணை மானியமாக ரூ.38,90,000/–ஐ (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து தொண்ணுறாயிரம் மட்டும்) தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகின்றது.

த.பி.பா.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் : –

"2230 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு – 01 தொழிலாளர் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I. திட்டத்தில் சேராதது–AA–தலைமையிடப் பணியாளர்கள்–தொழிலாளர் ஆணையாளர்–09 உதவித் தொகை –01. நடப்புச் செலவுக்கான உதவித்தொகை" .
(து.தொ.கு.2230–01–001– AA –0916)

4. தொழிலாளர் ஆணையர், சென்னை, பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்துள்ள மானியத் தொகையைப் பெற்று தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநருக்கு காசோலையாக வழஙகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர்(பொ), பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்துள்ள மானியத் தொகையை தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வஙகியில் வைப்பீடு செய்து நிதியை நிர்வகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் மூன்றாம் மற்றும் நான்காம் தவணைக்கான பயனீட்டு சான்றுகளை (Utilisation certificate)அனுப்புமாறு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 22991/ (தொ.ம.வே.வா.துறை), நாள் 20.01.2009–ன் மூலம் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த. பிரபாகரராவ்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
இயக்குநர்(பொ), தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்,
சென்னை–600 005.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–600 035.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018 (பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை–600 035.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 035 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–600 005.

**நகல்:**
நிதி (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

அரசு சார்புச் செயலாளர்